# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:172** **தேதி:-26.09.2014**

## இரண்டு மணி நேர வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்

அன்பார்ந்த தோழர்களே,

நாடு தழுவிய அளவில் 23.09.2014 அன்று JAC சார்பாக நடைபெற்ற தர்ணா போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. ஆயினும் நிர்வாகம் நமது நியாயமான கோரிக்கைகளில் கேளாக்காதினராய் உள்ளது. இந்த சூழ்நிலையில் நமது போராட்டத்தை தீவிரப்படுத்துவதை தவிர நமக்கு வேறு மார்க்கம் கிடையாது. மாவட்ட செயலாளர்கள் JACயில் உள்ள இதர சங்கங்களை தொடர்பு கொண்டு 30.09.2014 அன்று நடைபெற உள்ள இரண்டு மணி நேர வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**கூட்டு மேடைகள் பொருத்தமானவை தான்:-** 25.09.2014 அன்று நடைபெற்ற 31ஆவது தேசிய கவுன்சில் கூட்டம் நடைபெறும் போது JAC மற்றும் FORUM போன்ற கூட்டு மேடைகள் தேவைதானா என GM(SR) கேள்வி எழுப்பினார். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இருக்கும் போது இது போன்ற கூட்டு மேடைகள் தேவையில்லை என்பதே அவரின் பார்வையாக இருந்தது. ஊழியர் தரப்பு செயலாளர் தோழர் P.அபிமன்யு இதற்கு தகுந்த பதிலை கொடுத்தார். திரு ஆ.ராசா தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த போது அவர் BSNLன் 45 மில்லியன் GSM இணைப்புகளுக்கான டெண்டரை ரத்து செய்தார் என அவர் தெரிவித்தார். BSNL நிர்வாகம் வேறு வழியின்றி தவித்து நின்ற போது 11.07.2007 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் FORUM தான் சென்றது. அதன் விளைவாகத்தான் BSNLக்கு 23 மில்லியன் இணைப்புகள் கிடைத்தன. மேலும் 93 மில்லியன் இணைப்புகளுக்கான டெண்டர் ரத்து செய்யப்பட்ட போது இந்த FORUM தான் 2010 டிசம்பரில் மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் செய்தது. BSNLக்கு திரும்ப கிடைக்க வேண்டிய BWA ஸ்பெக்ட்ரத்திற்கான கட்டணம் திரும்ப பெறவும், வாங்கும் உண்மையான சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதிய பங்கினை கணக்கிட வேண்டும் என்றும் கிராமப்புற தரைவழி இணைப்புகளுக்கான போதுமான இழப்பீடு வழங்கிட வேண்டும் எனவும் இந்த FORUM தான் போராடி வருகின்றது என தோழர் P.அபிமன்யு அவர்கள் குறிப்பிட்டார். இந்த FORUM தலைமை தாங்கும் அனைத்து சங்கங்களின் போராட்டங்கள் காரணமாகத்தான் BSNL இன்னும் உயிருடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என இறுதியில் அவர் உறுதிபட தெரிவித்தார்.

**ராஜாவை விஞ்சும் விசுவாசி- TRAI:-** 21000 கோடி ரூபாய் NOFN திட்டத்தில் தனியார் நிறுவனங்களை ஏன் ஈடுபடுத்த வில்லை என TRAI, அரசாங்கத்தை கேள்வி கேட்டுள்ளது. நாடு முழுவதும் ஆப்டிக் ஃபைபரை இடும் NOFN திட்டத்தை அரசாங்கம் BSNL, POWER GRID CORPORATION மற்றும் RAILTEL ஆகிய மூன்று பொதுத்துறை நிறுவன்ங்களிடம் ஒப்படைத்துள்ளது. ஆகஸ்ட் மாத இறுதியில் TRAIயின் தலைவர் ராகுல் குல்லார், இந்த திட்டத்தில் அரசாங்கம் ஏன் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்தவில்லை என்று கேள்வி எழுப்பி உள்ளார். தற்போது NOFN திட்டத்தை விரைவு படுத்த தனியார் நிறுவனங்களையும் பயன்படுத்த வேண்டும் என ஆலோசனைகளுடன் கூடிய ஒரு அறிக்கையினை TRAI வெளியிட்டுள்ளது. இது தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக TRAI செயல்படுவதை

தெளிவாக தெரிவிக்கிறது. கடந்த காலங்களிலும் இதுபோன்று BSNLக்கு எதிரான தனியார் ஆதரவு முடிவுகளை TRAI எடுத்துள்ளது. தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்படும் ராகுல் குல்லார் போன்றவர்கள் தலைவராக இருக்கும்போது TRAI எப்படி நேர்மையான நியாயமான முடிவுகளை எடுக்கும் என்று நாம் எப்படி நம்ப முடியும்?

**வெள்ளம் பாதிக்கப்பட்ட காஷ்மீர் மக்களுக்கு BSNL:-** சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினை கணக்கில் கொண்டு பொது மக்கள் 10 நாட்கள் இலவசமாக பேசுவதற்கான வாய்ப்பை BSNL நிறுவனம் கொடுத்துள்ளது. BSNLன் ஊழியர்களும் அதிகாரிகளும், இரவு பகலாக, ஓய்வு ஒழிச்சல் இன்றி செயல்பட்டு மொபைல் சேவைகளை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். தற்போது அந்த சேவைகள் முற்றிலும் சரி செய்யப்பட்டு விட்டன. தற்போது மனிதாபிமான மற்றும் நல்லெண்ண் அடிப்படையில் இந்த வெள்ளத்தால் மொபைல் தொலைபேசி இழந்தவர்களுக்கு இலவசமாக DUPLICATE சிம்கள் வழங்கவும் BSNL நிறுவனம் முடிவு செய்து வழங்கி வருகிறது. இது தான் பொதுத்துறை நிறுவனத்தின் செயல்பாடு.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட BSNL ஊழியர்களுக்கு:-** 25.09.2014 அன்று கூடிய 31ஆவது தேசியக் கவுன்சில் கூட்டத்தில் வெள்ளத்தால் உயிரிழந்த காஷ்மீர் மக்களுக்கு ஒரு நிமிட மவுனம் அனுஷ்டித்து தனது அஞ்சலியை செலுத்தியது. அந்தக் கூட்டத்தில் கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காஷ்மீர் மாநில BSNL ஊழியர்களுக்கு மூன்று மாத ஊதியத்தை முன்பணமாக கொடுக்க வேண்டும் என ஊழியர் தரப்பு கடுமையாக கேட்டுக் கொண்டது. அதனை ஏற்றுக் கொண்ட மனித வள இயக்குனர் அந்த முன்பணம் உடனடியாக வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

**ஆர்ப்பாட்டம் தர்ணா ஆகியவற்றை தடை செய்யும் உத்தரவு கிடப்பில் போடப்பட்டது:-** BSNL நிறுவனத்தில் ஆர்ப்பாட்டம் தர்ணா உள்ளிட்ட அமைதியான தொழிற்சங்க நடவடிக்கைகளை தடைசெய்யும் ஒரு மோசமான உத்தரவை கார்ப்பரேட் அலுவலகத்தின் SR கிளை 18.09.2014 அன்று வெளியிட்டது. தேசியக் கவுன்சில் கூட்டத்தில் இந்த உத்தரவை ஊழியர் தரப்பு கடுமையாக எதிர்த்ததுடன் அந்த உத்தரவு உடனடியாக திரும்ப பெறப்பட வேண்டும் என வலியுறுத்தினர். ஊழியர் தரப்பின் இந்த கடுமையான எதிர்ப்பை கண்டவுடன் அந்த உத்தரவை நிறுத்தி வைக்கும்படி மனித வள இயக்குனர் அறிவுறுத்தினார். அந்த உத்தரவை நிறுத்தி வைக்க உத்தரவிட்ட மனித வள இயக்குனர் திரு A.N. ராய் அவரகளுக்கு BSNL ஊழியர் சங்கம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**கேரளாவில் சகஜ நிலை தேவை:-** SNEA தலைவர்கள் மேற்கொண்டுள்ள கால வரையற்ற உண்ணா நோன்பினை மனித வள இயக்குனரின் கவனத்திற்கு ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் கொண்டு வந்தனர். மேலும் கேரள மாநில தலைமை பொது மேலாளரின் பிடிவாதமான பழிவாங்கும் போக்கின் காரணமாக அங்கு ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் மீது தங்களின் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்தனர். இந்த பிரச்சனையில் உடனடியாக CMD தலையிட்டு நிலைமை மேலும் மோசமாகாமல் தடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(S.செல்லப்பா)
மாநில செயலாளர்